1989 பிப்ரவரி 18] [திரு. மா. மணிமாறன்]

கொடுக்காமல் இருந்ததை விவசாயிகள் கடந்த அரசுக்குப் பல முறை வேண்டுகோள் விட்டும், நேரடியாகப் பார்த்தும், கேட்டும், விவசாயிகளுக்கு உதவாத நிலையில் இப்போது பொறுப்பு ஏற்றிருக்கின்ற கலைஞர் அரசும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் கொடுப்பதற்கு ஆய்வு செய்வதைப் பாராட்டி, நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து, இது போன்ற கவன ஈர்ப்புக் கொடுப்பவர்கள் வினாவைத்தான் எழுப்பலாமே தவிர, வினா இல்லை என்று சொன்னால் விட்டு விடலாம்; அதனால் கண்டிப்பாகக் கேட்டுத்தான் ஆக வேண்டுமென்ற கட்டாயம் இல்லை.

2. தகவல் கோரல்.

(அ) ஓட்டல் உணவுப் பண்டங்களின் விலையைக் குறைக்க அரசு நடவடிக்கை.

திரு. வே. பெரியசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வாரத்திற்கு முன்பு செய்தித் தாளில் மாண்புமிகு உணவு அமைச்சரவர்கள் ஓட்டல் முதலாளிகளுடன் கலந்து பேசி உணவுப் பண்டங்களின் விலைகளையெல்லாம் குறைப்பதாகச் செய்தித் தாளில் அறிந்தேன். அவர்களும், அவைகளுடைய முதலாளிகளெல்லாம் ஒன்று சேர்ந்து குறைப்பதாகச் சொல்லியிருந்தார்கள். அதை எப்பொழுது குறைக்கப் போகிறார்கள் என்ற செய்தியை மாண்புமிகு அமைச்சரவர்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை எந்த அடிப்படையில் தாங்கள் எழுப்புகிறீர்கள் என்று சொல்ல முடியுமா? இப்படி எழுப்புவதற்கு அவையில் இடமில்லை. தனியாகக் கேட்க வேண்டும்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

* **திரு. ஆர். சிங்காரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அது குறித்துப் பதில் அளிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்களுடைய ஒத்திவைப்புத் தீர்மானம் ஆய்வில் உள்ளது. அதுபற்றி அறையிலே கேட்க வேண்டும்,

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்—தொடர்ச்சி.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சட்டமன்றக் கூட்டம் வருகிற திங்கட்கிழமை யோடு இந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்படுவதோடு முடிகிறது என்று கருதுகிறேன். நாங்க ளெல்லாம் பல்வேறு ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானம் எல்லாம் கொடுத்திருக்கிறோம் அதிலே பல, எந்த விதக் காரணமும் இல்லாமல் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று தபால் வருகிறது. ஏதாவது காரணம் சொல்லியிருந்தால்கூட நாங்கள் புரிந்துகொள்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தொடர்பாக உறுப்பினர்கள் விளக்கம் பெறவேண்டுமென்றால், அருள்கூர்ந்து என் அறைக்கு வந்து கேட்கவேண்டும். அவையிலே இதை எழுப்பக்கூடாது . . . .

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, மறுக்கப்பட்டால் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மறுக்கப்பட்டால் அதைப் பற்றி என் அறையில் வந்து விளக்கம் தெரிந்துகொள்ளவேண்டும். (குறுக்கீடு) இதில் நீங்கள் பேசுவது அவைக்குறிப்பிலிருந்து எடுக்கப்பட வேண்டியிருக்கும்.

(ஊ) சட்டமன்றப் பேரவையிலுள்ள கட்சிகள் மற்றும் அணி களின் பெயர்கள் குறித்து—தொடர்ச்சி.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சிக் கொறடா அவர்கள் அகில இந்திய ஜனதா தளம், மாநில ஜனதா கட்சி பற்றி விவரம் கேட் டார். ஏற்கெனவே அகில இந்திய ஜனதா கட்சி, ஜனமோர்ச்சா கட்சி, லோக் தள் அஜித் சிங் கட்சி, காங்கிரஸ் (எஸ்) ஓரளவிலே எல்லோரும் சேர்ந்து பெங்களூர் மகாநாட்டிலே ஒன்றாக இணைந்துவிட்டோம். இணைந்து, ஜனதாதளம் என்று வைத் திருக்கிறோம். தளம் என்றால் கட்சி என்று பெயர். 'பார்ட்டி' என்று அதற்குப் பெயர். ஆக அவர் கேட்ட விளக்கமானது தமிழ்நாடு ஜனதா கட்சி . . . .